**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS. 384/2022

பெயர் : லெட்சுமி நாராயணன் (DW1) (Cross Continuation)

த/க/பெ. :

தேதி :31.10.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என் பிரமாண வாக்குமூலத்தில் அபிராமி பைனான்சில் வேலை பார்த்ததாக சொல்லி உள்ளேன். வசூல் செய்யும் வேலை பார்த்தேன். 1986 ல் வேலைக்கு சேர்ந்தேன். நான் பிறந்த ஆண்டு 1967. அப்போது 600 மாத சம்பளம். சுமார் 10 ஆண்டுகளாக வேலை பார்த்தேன். என் மாமா வீட்டில் தங்கி சாப்பிடுவேன். என் எதிர் வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்திலும் 1994 ல் பி அட்டவணை சொத்தை வாங்கி உள்ளதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். எந்த தேதியில் யாரிடம் எவ்வளவு தெகைக்கு வாங்கினேன் என்று குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சரிதான். நான் வாங்கிய ஆவணத்தை பதிவு செய்துள்ளதாக சொல்லி உள்ளேன். கிரய ஆவணத்தை பதிவு செய்ததாக என் எதிர் வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்ல வில்லை என்றால் சரியல்ல. என் தந்தை கணேசன் 1997 ல் இறந்தார். பி.வா.சா.ஆ. 8, 9 ல் 1998 ல் இறந்ததாக உள்ளது என்றால் சரிதான். என் எதிர் வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் என் தந்தை இறப்பிற்கு பின்னர் சி அட்டவணை சொத்தை வாங்கி உள்ளேன் என்றால் சரிதான். இதற்கு எதிராக நிரூபண வாக்குமூலத்தில் 1990, 1991, 1999 ல் வாங்கியதாக சொல்லி உள்ளேன் என்றாலும் எது உண்மை என்றாலும் என் தந்தை இறந்த பின்னர் தான் வாங்கினேன். பிரமாண வாக்குமூலத்தில் பி அட்டவணைக்கு என் பெயரில் பட்டா வழங்கியதாக சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். நான் சம்பாதித்த பணத்தை கொண்டு வாங்கியதாக சொல்லி உள்ளேன். பி.வா.சா.ஆ. 4, 5 என் பெயரில் எப்போது பட்டா வழங்கப்பட்டது என்பதை என் பிரமாண வாக்குமூலம் மற்றும் எதிர் வழக்குரையில் சொல்ல வில்லை என்றால் 1994 ல் கொடுத்தார்கள். தாவா பி, சி அட்டவணை சொத்துக்கள் சுயமாக சம்பாதித்து நான் வாங்கியிருந்தால் எப்போது யாரிடம் வாங்கினேன் என்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அவ்வாறு தாக்கல்செய்யாததால் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால்

சரியல்ல. பட்டா என்பது அனுபவத்தை காட்டக்கூடிய ஆவணம் மட்டுமே உரிமை மூலத்தை காட்டும் ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. என் பிரமாண வாக்குமூலம் மற்றும் எதிர் வழக்குரையில் என் தந்தை மன நலம் பாதிக்கப்பட்டவர் என்பதை சொல்லி உள்ளேன். அதை உறுதி படுத்த மருததுவ அவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. வழக்கிற்காக என் தந்தை மன நலம் பாதிக்கபட்டடதாக சொல்லி உள்ளேன் என்றாலும் அவ்வாறு இருந்திருந்தால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. என் பிரமாண வாக்குமூலம் மற்றும் எதிர் வழக்குரையில் 1998 ல் அபிராமி பைனான்சில் 600 சம்பளத்திற்கு வேலை பார்த்தேன் என்றும் எத்தனை ஆண்டுகள் வேலை பார்த்தேன் என்றும் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. என் எதிர் வழக்குரையில் சி அட்டபணை முதல் அயிட்டம் முழுவதும் கரவோலை படி எனக்கு ஒதுக்கப்ட்டதாக சொல்லி உள்ளேன் என்றாலும், 2 வது அயிட்டம் 200 குழி ஒதுக்கப்பட்டதாகவும், சி அட்டவணையில் 3, 4 வது அயிட்டம் என் தயாருக்கு ஒதுக்கப்பட்டதாகவும், 5, 6 வது அயிட்ட சொத்துக்கள் 2ம் வாதிக்கு ஒதுக்கப்பட்டதாக சொல்லி உள்ளேன் என்றாலும் அதற்கான அசல் கரவோலையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். சி அட்டவணை சொத்தில் எந்தெந்த சொத்து தற்போது சாகுபடி செய்வது என்றால் 180, 180/3, 185, 195. இவற்றில் 180 ல் 200 குழி மட்டுமே என்னிடம்உள்ளது மீது வாதிகள் தான் சாகுபடி செய்கிறார்கள். பொதுவாக பாக பிரிவினையில் அதன் தரப்பினர்களளுக்கு சமமாக தான் பிரிப்பார்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 1 ல் எனக்கு அதிக பங்கு, அதிக விளைச்சல் நிலம் ஒதுக்கப்ட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு குறைவாக ஒதுக்கப்பட்டுள்ளது. என் பிரமாண வாக்குமூலம் மற்றும் எதிர் வழக்குரையில் குறைவாக ஒதுக்கப்பட்டதாக சொல்லவில்லை. வழக்கிற்காக தான் பி.வா.சா.ஆ.1ல் எனக்கு குறைவாக ஒதுக்கப்பட்டதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக பாக பரிவினை ஆவணத்தில் பாகசொத்தின் மதிப்பை காட்டுவார்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 1ல் சொத்துக்களின் மதிப்பு காட்டப்படவில்லை என்றால் சரிதான். அதற்கு தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் இல்லை. சொத்தின் மதிப்பை குறிப்பிட்டால் எனக்கு அதிகமாக ஒதுக்கபட்டது தெரியவந்து விடும் என்பதால் தான் காட்டபடவில்லை என்றால் சரியல்ல. தாவா பி அட்டவணை சொத்தை நான் வாங்கியதாக பி.வா.சா. ஆ. 1ல் இல்லை. வழக்கு எ அட்டவணை 2 வது அயிட்டம் சொத்தை நான் வாங்கியதாக பி.வா.சா. ஆ. 1 ல் இல்லை. 1994 ல் எனக்கு

பட்டா வழங்கப்பட்டிருந்தால் பி.வா.சா.ஆ. 1ல் சொல்லப்பட்டிருக்கும் என்றாலும் வழக்கிற்காக தான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கணேசன் குடும்ப மூத்த வாரிசு என்பதால் பி.வா.சா.ஆ. 4, 5 பட்டா 2021 ல் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 1 முறையாக மதிப்பீடு செய்யப்படாமல் தரப்பினர்களுக்கு இடையே சமமாக பாகம் பிரிக்கப்பட்டதாக சட்டத்தின் பார்வையில் அது செல்லக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. என் பிரமாண வாக்குமூலம் மற்றும் எதிர் வழக்குரையில் 2, 3 பிரதிவாதிகளுக்கு எ னக்கு ஒதுக்கப்பட்டதாக சொத்துக்களை ஒப்பந்தம் செய்துள்ளதாக சொல்லி உள்ளேன். தேதி குறிப்பிடவில்லை. வாதிகளுக்கு ஒதுக்கபட்ட சொத்துக்களை 3ம் நபர்களுக்கு விற்பணை செய்துள்ளதாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 1 நேர்மையான முறையிலும், சரியான விகிதாச்சார அடிப்படையில் ஏற்படவில்லை என்பதால் தான் பி, சி அட்டவணை தவிர்த்து மற்ற சொத்துககளில் 1/3 பாகம் ஒதுக்குமாறு மாற்றி சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் குடும்ப பூர்வீக சொத்து என்பதாலும், பி. சி அட்டவணை குறித்து தனிப்பட்ட சொங்தது என்பதற்கான ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யாததால் வாதிகள் கோரியபடி பாகம் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. தாவாபடி தீர்வாக வேண்டும் என்றால் சரியல்ல.